உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்ற விவேகானந்தா பள்ளி

சீனியர் செகண்டரி ஸ்கூல் (CBSE)

லிங்கன் உலக சாதனைக்கான சான்றிதழை பெறும் விவேகானந்தா பள்ளி நிர்வாகத்தினர்.

பரமத்தி வேலூர், அக்.14: பரமத்தி வேலூர் வட்டம், பாண்டமங்கலம் விவேகானந்தா வித்யாலயம் பப்ளிக் பள்ளி மாணவர்கள், அகர வரிசையில் தொடர்ந்து நின்று 'லிங்கன் புக் ஆப் ரெக்கார்ட்ஸ்' சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளனர்.

அகரம் என்ற தலைப்பில் மழலையர் முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் 130 மாணவர்கள் பங்கேற்று 30 நிமிடங்களில் தமிழின் அகர வரிசை எழுத்துக்களை உருவ வடிவில் நின்றும், தமிழ் மொழியின் சிறப்புகளை கூறியும் புதிய உலக சாதனை படைத்தனர்.

நிகழ்வில் பள்ளி தாளாளர் ராமசாமி, கல்விசார் இயக்குநர் பழனிசாமி, இயக்குநர்கள் துரைசாமி, வாசுதேவன், அருளானந்தன் மற்றும் முதல்வர்கள் ஜெயந்தி, சிவச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்வை 'லிங்கன் புக் ஆப் ரெக்கார்ட்ஸ்' நிர்வாகிகள் முனைவர் ஜோசப் இளந்தென்றல், முனைவர் நிர்மல்ராஜ் மற்றும் விக்னேஸ்வரி ஆகியோர் ஆய்வுசெய்து சாதனைக்கான சான்றிதழ்களை வழங்கினர்.

விளையாட்டுப் போட்டி: விவேகானந்தா வித்யாலயம், மழலையர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் சார்பில் கடந்த 10 ஆம் தேதி நடைபெற்ற விளையாட்டு விழாவிற்கு எம் குமாரசாமி பொறியியல் கல்லூரி தலைவர் முனைவர் கே. ராமகிருஷ்ணன் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கினார்.

சூரிய மின்சக்தி திட்ட விழிப்புணர்வு முகாம்

பரமத்தி வேலூர், அக். 14: வீடுகளில் சூரிய மின்சக்தி தகடுகள் அமைப்பது குறித்து பரமத்தி வேலூரில் விழிப்புணர்வு முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

பரமத்தி வேலூர் கோட்ட செயற்பொறியாளர் சீ. வரதராஜன் முகாமிற்கு தலைமை வகித்தார். மாவட்ட மேற்பார்வை பொறியாளர் சபாநாயகம் முன்னிலை வகித்தார். கரூர் மண்டல தலைமை பொறியாளர் கலைச்செல்வி விழிப்புணர்வு முகாமில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, மின் தேவையை குறைக்கும் நோக்கில் பொதுமக்கள் தங்களது வீடுகளின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி தகடுகளை அதிகளவில் அமைக்க முன்வர வேண்டும் என்றார்.

நல்லூர், பரமத்தி வேலூர், மோகனூர் மற்றும் கபிலர்மலை உதவி செயற்பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள்,பொதுமக்கள் பங்கேற்றனர். பரமத்தி வேலூர் உதவி பொறியாளர் வினோத்குமார் நன்றி கூறினார்.

வெள்ளக்கோயில்- சங்ககிரி இடையே

நான்குவழிச் சாலைத் திட்டத்தை ரத்துசெய்யக் கோரி பொதுமக்கள் மனு

குமாரபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்க வந்த எலந்தகுட்டை பகுதி மக்கள்.

நாமக்கல்,அக்.14: வெள்ளக்கோயில்-சங்ககிரி இடையே புதிய நான்குவழிச் சாலை அமைக்கும் திட்டத்தை ரத்து செய்யக் கோரி எலந்தகுட்டை பகுதி மக்கள் குமாரபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை மனு அளித்தனர்.

அவர்கள் அளித்த மனு விவரம்:

சேலம் மாவட்டம், சங்ககிரி முதல் திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோயில் வரையில் தேசிய நெடுஞ்சாலை(என்ஹெச்-381ஏ) அமைக்கும் திட்டம் நான்கு வழிச் சாலையாக செயல்படுத்தப்பட உள்ளது. எலந்தக்குட்டை கிராமம் வழியாக இந்த சாலை அமைக்கப்பட இருப்பதாகவும், அதற்கான நில ஆர்ஜிதம் விரைவில் தொடங்க உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக குமாரபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கடிதம் வந்துள்ளது. சாலைக்கு நிலம் எடுக்கும்போது ஏராளமான விவசாய நிலங்கள், குடியிருப்புகள் அகற்றப்பட வாய்ப்புள்ளது. இந்தத் திட்டத்தை ரத்துசெய்து மாற்றுப்பாதையில் தேசிய நெடுஞ்சாலை அமைக்க அரசு முயற்சிக்க வேண்டும்.

திருச்செங்கோடு சுற்றுவட்டச் சாலை வழியாக சங்ககிரிக்கு செல்ல சாலை அமைத்து கொடுத்தால், விவசாய நிலங்கள் அழிக்கப்படுவது தடுக்கப்படும். அரசுக்கும் நிதி சுமை வெகுவாக குறையும். எனவே, மாற்று வழித்தடத்தில் சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகப் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

நாமக்கல், அக். 14: நாமக்கல் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் காலியாக உள்ள உதவி வரவேற்பாளர் பணியிடத்துக்கு விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் எல். மதுபாலன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் காலியாக உள்ள உதவி வரவேற்பாளர் பணியிடம் இனசுழற்சி முறையில் நிரப்பப்பட உள்ளது. இந்த பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் பெண்கள் 100 சதவீதம் பார்வையற்றவராக இருக்க வேண்டும். எட்டாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 40 வயதிற்கு உள்பட்டவராக இருக்க வேண்டும்.

நாற்காலி இருக்கை பின்னுதலில் ஓராண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அட்டை, பார்வையற்றோர் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, கல்வி சான்றிதழ், மற்றும் புகைப்படத்துடன் அக்.26க்குள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், அறை எண் 9, தரைத்தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் என்ற முகவரியில் ஒப்படைக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேலத்தில் 2 கிலோ கஞ்சா பறிமுதல்: 4 பேர் கைது

சேலம், அக். 14: சேலம் முள்ளுவாடி கேட் பகுதியில் ரோந்துப் பணியின் போது 2 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்த போலீஸார், இது தொடர்பாக 4 பேரை புதன்கிழமை கைது செய்தனர்.

சேலம் முள்ளுவாடி கேட் மேம்பாலம் பகுதியில் நகரப் போலீஸார் புதன்கிழமை மாலை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த 4 பேரை பிடித்து அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்தனர். அதில், வலி நிவாரண மாத்திரைகளும், கஞ்சாவும் இருப்பது தெரியவந்தது.

தொடர் விசாரணையில், போதைக்காக வலி நிவாரண மாத்திரைகளையும், கஞ்சாவையும் வாங்கி விற்பனை செய்ய வைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து, ரிஷிகேஷ் (23), விக்கி (எ) விக்னேஷ் (25), ஈஸ்வரன் (26), ஆனந்தகுமார் (22) ஆகிய 4 பேரை கைது செய்த போலீஸார், அவர்களிடமிருந்து 112 வலி நிவாரண மாத்திரைகளையும், 2 கிலோ 250 கிராம் கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர்.

அக். 20 இல் திருச்செங்கோடு மாரியம்மன் கோயிலில் தெப்போற்சவம்

திருச்செங்கோடு, அக். 14: திருச்செங்கோடு பெரிய மாரியம்மன், சின்ன மாரியம்மன், அழகுமுத்து மாரியம்மன் கோயிலில் வரும் 20 ஆம் தேதி தெப்போற்சவம் நடைபெறுகிறது.

இதையொட்டி புதன்கிழமை அம்மனுக்கு சிறப்பு பூஜைகளுடன் விழா தொடங்கப்பட்டது. சட்டையம்புதூரில் அமைந்துள்ள பெரிய தெப்பக்குளத்தில் வரும் 20 ஆம் தேதி தெப்பல் விழா நடத்தப்படுகிறது. 30 அடி நீளம் 30 அடி அகலத்தில் அமைக்கப்படும் தெப்பத்தை திருச்செங்கோடு ஸ்ரீ பாதம் தாங்கிகள் குழுவினர் வடிவமைத்து வருகின்றனர்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறும் தெப்போற்சவத்தை காண்பதற்காக ஏராளமான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து அம்மனுக்கு பொங்கல் வைத்தல், வீதி உலா என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

ஆலோசனைக் கூட்டம்:

வருவாய் கோட்டாட்சியர் லெனின் தலைமையில் தெப்போற்சவம் குறித்த ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. வட்டாட்சியர் ராஜா, நகராட்சி பணி மேற்பார்வையாளர் சசிதரன் கோயில்கள் சார்பில் ஊர் கவுண்டர் ராஜா, சதீஷ், செங்கோட்டு வேல், காவல் துறை சார்பில் நகரக் காவல் நிலைய ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன், சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி, அர்த்தநாரீஸ்வரர் கோயில் கண்காணிப்பாளர் கல்பனா, தீயணைப்பு நிலைய அலுவலர் கரிகாலன், அறங்காவலர் குழு சார்பில் சித்ரா வண்ண கண்ணன், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ஆய்வாளர் நிர்மலா தேவி, நெடுஞ்சாலை துறை சார்பில் ஆய்வாளர் சீனிவாசன், பொதுப்பணித் துறை சார்பில் உதவி பொறியாளர் தினேஷ் பங்கேற்றனர்.

கூட்டத்தில் விழா பாதுகாப்பு, நிகழ்ச்சிகள் மற்றும் அம்மன் வீதிஉலா, பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

திருச்செங்கோட்டில்

அமைச்சர் அருண்ராஜ் பிறந்த நாள் விழா

அமைச்சர் கே.ஜி. அருண்ராஜ் பிறந்த நாளையொட்டி, திருச்செங்கோடு ஒன்றியத்தில் மரக்கன்றுகளை நடவு செய்த தவெகவினர்.

திருச்செங்கோடு, அக்.14: தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கே.ஜி. அருண்ராஜின் 48 ஆவது பிறந்த நாள் விழா திருச்செங்கோட்டில் பல்வேறு இடங்களில் புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளரும், அமைச்சருமான கே.ஜி. அருண்ராஜின் பூர்வீக கிராமமான மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்பமலை சாலையில் உள்ள கோட்டப்பாளையம் கிராமத்தில் தவெக, ஊர் பொதுமக்கள் சார்பில் நடத்தப்பட்ட பிறந்த நாள் விழாவில் 200-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், எழுதுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

அதேபோல சாலையோரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. கோயில்களில் சிறப்பு வழிபாடு, ஆதரவற்றவர்களுக்கு உணவு, இலவச மருத்துவ முகாம் என பல்வேறு நிகழ்ச்சிகளை 'நமது ஊர் நமது அமைச்சர் நமது மக்கள்' என்ற தலைப்பில் கட்சியினர், ஊர் பொதுமக்கள் நடத்தினர்.

விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

திருச்செங்கோடு, அக்.14: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடன் முழுவதையும் ரத்துசெய்ய கோரி திருச்செங்கோடு ஒன்றியம், விட்டம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் முன் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஒன்றியத் தலைவர் முத்துசாமி தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள், பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யக் கோரி முழக்கமிட்டனர்.

DBS வங்கி இந்தியா லிமிடெட்,
கோயம்புத்தூர் பிராந்திய அலுவலகம்,
எண்.68, பிளாட்டினம் ஜுப்ளி பில்டிங், 1வது தளம்,
ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர் – 641 001.

DBS

அசையாச் சொத்தின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-A (காண்க நிபந்தனையின் விதி 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

DBS வங்கி இந்தியா லிமிடெட், சேலம் டவுன் கிளை அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்), வங்கிக்கு வரவேண்டிய தொகை **தொழிற் கடன் வசதிக்கு : ரூ.1,23,77,282.57 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து மூன்று லட்சத்து எழுபத்து ஏழாயிரத்து இருநூற்று எண்பத்து இரண்டு மற்றும் பைசா ஐம்பத்து ஏழு மட்டும்) 13.10.2026** தேதி அன்று மற்றும் **14.10.2026** தேதியிலிருந்து பின்வரும் அபராத செலவுகளுடன் கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் : **1. M/s.AVS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்**, பங்குதாரர் நிறுவனம், எண்.29, 2வது தளம், பாலாஜி நகர், ஃபேர்லேண்ட்ஸ், சேலம் – 636 004, **2. திரு.K.விஸ்வநாதன், பங்குதாரர் : M/s.AVS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்**, எண்.2/252, அக்ரவளத்தார் தோட்டம், முத்துகாளிப்பட்டி கிராமம், ராசிபுரம் தாலுகா, நாமக்கல் மாவட்டம் – 637 408, **3. திரு.N.கிருஷ்ணன், பங்குதாரர் : M/s.AVS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்**, எண்.2/252, அக்ரவளத்தார் தோட்டம், முத்துகாளிப்பட்டி கிராமம், ராசிபுரம் தாலுகா, நாமக்கல் மாவட்டம் – 637 408, **4. திரு.U. இந்திரபிரசாத்**, எண்.13/10, B பிளாக், பார்சன் டெல்டா என்கிளேவ், மாம்பழசாலை, திருச்சி – 620 005, என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்கு அடமானப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, காலி சுவாதீனம் (Vacant Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர் (கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் "எங்கு உள்ளதோ உள்ளபடி", 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்" விற்கப்படும்.

ஏல விபரம் :

மின் ஏலத் தேதி	**17.11.2026 ; காலை 11.00 மணியிலிருந்து மதியம் 1.00 மணி வரை, 5 நிமிட அளவற்ற நீட்டிப்புகளுடன்.**
முன்வைப்புத் தொகை செலுத்த கடைசித் தேதி மற்றும் நேரம் விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இடம் மற்றும் தொடர்பு முகவரி	**16.11.2026 ; மாலை 4.00 மணிக்கு முன்னதாக.** DBS வங்கி இந்தியா லிமிடெட், கோயம்புத்தூர் பிராந்திய அலுவலகம், எண்.68, பிளாட்டினம் ஜுப்ளி பில்டிங், 1வது தளம், ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர் – 641 001. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : திரு.R.யுவராஜ் – 98848 56789 வசூல் அதிகாரிகள்:திரு.P.சதீஷ்குமார் – 9791557361 மற்றும் திரு.M.தனபால் – 97905 11385.
நிர்ணயிக்கப்பட்ட விலை	**ரூ.1,07,10,000/– (ரூபாய் ஒரு கோடியே ஏழு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)**
ஏல உயர்வுத் தொகை	**ரூ.25,000/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)**
முன்வைப்புத் தொகை	**ரூ.10,71,000/– (ரூபாய் பத்து லட்சத்து எழுபத்து ஓராயிரம் மட்டும்)** **DD/NEFT/RTGS வழியில்,** **DBS வங்கி இந்தியா லிமிடெட் பெயருக்கு,** **மும்பையில் செலுத்தும்படியாக,** **கணக்கு எண். 811LIABIOTS01INR,** **IFSC : DBSS0IN0811.**

அசையாச் சொத்து விபரம் : நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலுகா, ராசிபுரம் டவுன் வார்டு எண்.2, கட்டனாச்சம்பட்டி, பிளாக் எண்.1, காட்டுக்கொட்டாய், ராசிபுரம் கிராமம், பழைய சர்வே எண்.159/6, நஞ்சை ஏக்கர் 1.19, வரி விதிப்பு ரூ.6.02 முழுமையும். **எல்லைகள் :** கிழமேல் ரோடுக்கு வடக்கு, காந்தி என்கிற பழனியப்பனின் நிலங்களுக்குத் தெற்கு, காந்தி என்கிற பழனியப்பனின் நிலங்களுக்குக் கிழக்கு, அப்பன் என்கிற ராமசாமி கவுண்டரின் நிலங்களுக்கு மேற்கு. 5 எச்பி மின்சார மோட்டார் பம்ப் செட்டுடனான ஒரு கிணறு, சர்வீஸ் இணைப்பு எண்.305, டவுன் சர்வேயின்படி ராசிபுரம் டவுன், பழைய பட்டா எண்.7039, பின்னர் பட்டா எண்.48, வார்டு A, பிளாக் 1, டவுன் சர்வே எண்.18/9, பரப்பு 0.4810.0 தீர்வை ரூ.6.01. அனைத்து வழித்தட உரிமைகள் மற்றும் அங்குள்ள அனைத்துப் பிற வசதிகளில் உரிமைகளுடன்.

கடன் விபரம் :

கடன் கணக்கு எண்.	**0661659000000326**
13(12), SARFAESI சட்டத்தின் கீழ் கேட்பு அறிவிப்பு தேதி	**15.03.2024**
13(12), SARFAESI சட்டத்தின் கீழ் கேட்பு அறிவிப்புத் தொகை	**ரூ.61,71,210.32 (ரூபாய் அறுபத்து ஒரு லட்சத்து எழுபத்து ஓராயிரத்து இருநூற்று பத்து மற்றும் பைசா முப்பத்து இரண்டு மட்டும்)**
சுவாதீன தேதி	15.09.2025
சுவாதீன அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி	18.09.2025

விரிவான நிபந்தனை விபரங்களுக்கு : அ) மின் ஏல சேவையாளரின் இணையதளம் **(https://sarfaesi.auctiontiger.net).**
ஆ) வங்கியின் இணையதளம் : **go.dbs.com/corpimportantannouncements**

தேதி : 14.10.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் DBS வங்கி இந்தியா லிமிடெட்.,

Indian Bank **நல்லூர் கிளை நல்லூர்**

விற்பனை அறிவிப்பு

கிளை : நல்லூர்
தொலைபேசி எண் : 9442700037

பிணைசொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 – ன் கீழான பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002– ன் விதி 6(2) & 8(6) / 9(1) க்கான விதி விலக்கு – ன் கீழான விற்பனை அறிவிப்பு.

பெறுனர் :

1). திரு. B வினோத் குமார் (கடன்தாரர் & அடமானதாரர்) த/பெ பாலசுந்தரம், கதவு எண். 349, கவுண்டிபாளையம் அஞ்சல், ஸ்ரீ நகர், நல்லூர் கிராமம், பரமத்தி வேலூர் தாலுக்கா, நாமக்கல் – 637 208

2). திரு துரைசாமி C (ஜாமீன்தாரர்) த/பெ சின்னசாமி, 1/175A, கோடைக்கினியகானூர், N. சீராப்பள்ளி, நாமக்கல் – 637 206

பொருள் : கடன் கணக்கு : இந்தியன் வங்கி, நல்லூர் கிளையில் உள்ள தங்களது வீட்டு வசதி கடன் கணக்கு (A/c எண். 6624021418)

திரு B வினோத் குமார் அவர்கள் இந்தயன் வங்கி, நல்லூர் கிளையிலிருந்து கடன் வசதிகளை பெற்று, அதனை திருப்பி செலுத்த இதன் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை (இனிமேற்கொண்டு "'சொத்துக்கள்" என்றே அழைக்கப்படும்) அடமானம் செய்து ஜாமீனளித்துள்ளார். திரு B வினோத் குமார் அவர்கள் வங்கிக்கான நிலுவைத்தொகைகளை செலுத்த தவறிவிட்டார். அதனால், அதிகாரப்பூர்வ அலுவலரால், பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 (இனிமேற்கொண்டு சுருக்கமாக "'சட்டம்" என்றே அழைக்கப்படும்) ன் பிரிவு 13(2) ன் கீழ், 07.10.2025 தேதிய கோரிக்கை அறிவிப்பை வங்கிக்கு கடன் பொறுப்பு கொண்டுள்ள கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்(கள்) திரு B வினோத் குமார் அவர்களை அழைத்து, 06.10.2025 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை **ரூ. 20,71,958/– (ரூபாய். இருபது இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து எட்டு மட்டும்)** மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள், இதரத கட்டணங்கள் மற்றும் செலவுகளை செலுத்த கோரப்பட்டது. இருவரும் 07.10.2025 தேதிய கோரிக்கை அறிவிப்புக்கு பின்னிட்டும் தொகையை செலுத்த தவறி விட்டனர். திரு B வினோத் குமார் கோரிக்கை அறிவிப்புக்கு பிறகும் நிலுவைத் தொகையை செலுத்தத் தவறியமையால், இதன் கீழ்க்குறிப்பிடப்பட்ட சொத்துக்களை அனைத்து சட்டப்பூர்வமான நடைமுறைகளை பின்பற்றி, அதிகாரப்பூர்வ அலுவலர் 20.01.2026 அன்று அடையாள சுவாதீனம் எடுத்துள்ளார்.சட்டப்பிரிவு 13 (4) ன் படி, ஜாமீன் பெற்று கடனளித்தவர், சுவாதீனம் எடுத்துள்ள சொத்துக்களை விற்பனை செய்து வரும் பணப்பலனை நிலுவைத்தொகை வசூலிப்புக்கு வைத்துக்கொள்ளலாம். அதன் படி, இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர் / அதிகாரப்பூர்வ அலுவலர் பட்டியலில் குறிப்பிட்டுள்ள ஜாமீன் சொத்துக்களை பின்வரும் முறையில் விற்பனை செய்திட உத்தேசித்துள்ளார். **உத்தேசித்துள்ள விற்பனையானது, பொது ஏலம் / ஏலம் மூலம் மின்னணு ஏல முறையை பயன்படுத்தி நடைபெறும்.** பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 ன் கீழ் வடிவமைக்கப்பட்ட, பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 9(1) ன் படி, உத்தேசித்துள்ள விற்பனைக்கு 15 நாட்களுக்கு முன்பு அறிவிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால் நாங்கள் இந்த அறிவிப்பை வழங்குகிறோம். 09.10.2026 ம் தேதியின் படி நிலுவையாக உள்ள தொகை **ரூ. 23,23,402/– (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து நானூற்று இரண்டு மட்டும்)** மற்றும் 14.08.2026 முதல் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள், இதர கட்டணங்கள் ஆகியன. இது 15 நாட்கள் முந்தைய அறிவிப்பு என்பதையும், பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் சட்டப்படி, இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர் / அதிகாரப்பூர்வ அலுவலரால் 15 நாட்கள் முடிவுற்ற பிறகு எந்த நேரத்திலும் விற்பனை செய்யப்படும் என்பதையும் தயவு கூர்ந்து அறியவும். **விற்பனை தேதி 31.10.2026 என நிர்ணயிக்கப்பட்டு அது மின்னணு ஏல முறையில் நடைபெறும்.** உத்தேச கொள்முதலாளர்கள் / ஏலதாரர்கள் பட்டியல் சொத்துகளை ஆய்வு செய்திடவோ, தொடர்புடைய ஆவணங்களையும், நாளது தேதி வரையிலான வில்லங்கச் சான்று ஆகியவற்றையும் அவரவர் சொந்த செலவுகளில் 12.10.2026 முதல் 30.10.2026 வரை காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை ஆய்வு செய்து கொள்ளலாம். பிணைச்சொத்து விற்பனைக்கான அடிப்படை விலை மற்றும் டேவணித்தொகை **(EMD)** பட்டியலில் குறிப்பிடப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மின்னணு ஏலத்துக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன வலைதளம் **(https://baanknet.com)** ல் கிடைக்கப்பெறலாம். உத்தேச ஏலதாரர்கள் / கொள்முதலாளர்கள் தங்களது அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை பயன்படுத்தி, தங்களை ஆன்லைன் வலைதளம் **(https://baanknet.com (PSB Alliance Pvt. Ltd)** ல் பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், தங்களது **eKYC** யை முடித் பிறகு, உத்தேச ஏலதாரர்கள் / கொள்முதலாளர்கள் டேவணித்தொகையை ல் 31.10.2026 அதாவது மின்னணு ஏல தேதியன்று அதாவது தளத்தில் மின்னனு ஏலம் முடிவுறு நேரத்துக்கு முன்பு **e–Wallet** ல் பரிவர்த்தனை செய்ய வேண்டும். பதிவு செய்தல் மற்றும் **eKYC** ஆகியவற்றை முன் கூட்டியே ஏலத்துக்கு முன்பாக முடிக்கப்பட்டிருக்க வேண்டும். இதன் மேற்குறிப்பிடப்பட்ட டேவணித்தொகையை ஆன்லைனில் அல்லது வலைதளத்திலிருந்து **(https://baanknet.com (PSB Alliance Pvt. Ltd)** ஏலதாரர்களின் **EMD Wallet** ல் செலுத்துவதற்கான சலான் உருவாக்கிய பிறகு செலுத்தப்பட வேண்டும். ஏதேனும் பட்டியலிடப்பட்ட வணிக ரீதியான வங்கியிலிருந்து **NEFT** பரிவர்த்தனை மூலமும் செய்யலாம். வேறு முறையிலான அதாவது காசோலை போன்ற முறைகளில் டேவணித்தொகை செலுத்துவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தேவையான டேவணித்தொகையை ஆன்லைனில் செலுத்தாத ஏலதாரர்கள், மின்னணு ஏலத்தில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். டேவணித்தொகைக்கு வட்டி கிடையாது. அதிகாரப்பூர்வ அலுவலர் / வங்கிக்கு எந்த விலைப்புள்ளியையும் எக்காரணமும் கூறாமல், ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை தள்ளி வைக்க / ஒத்தி வைக்க / ரத்து செய்ய உண்டான முழு உரிமையும் உள்ளது. வெற்றி பெற்ற ஏலதாரர், செலுத்தப்பட்ட டேவணித்தொகை (10%) உட்பட விலைத்தொகையில் 25% (இருபத்து ஐந்து சதவீதம்) யை அதிகபட்சம் அடுத்த வேலை நாளன்று செலுத்த வேண்டும், மீதி தொகையை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் வங்கியாளர் காசோலை / கேட்பு வரைவோலை / கணக்கு பரிவர்த்தனை மற்றும் / அல்லது வேறு ஏதேனும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலான பணப்பரிவர்த்தனை மூலம் செலுத்தப்பட வேண்டும். ஆன்லைன் பணப்பரிவர்த்தனைக்கான சர்க்ஹப் வங்கி கணக்கு எண். / **IFSC Code** போன்றவை கீழ்க்கண்டவாறு –

சர்க்ஹப் வங்கி கணக்கு எண் மற்றும் கணக்கு பெயர்	கிளை பெயர் மற்றும் IFSC Code
கணக்கு எண். 98741002257 கணக்கு பெயர் – **Indian Bank Nodal Account**	இந்தியன் வங்கி, திருப்பூர் **IFS Code – IDIB000T041**

அவ்வாறு மீதித் தொகை உரிய / ஏற்றுக்கொள்ளப்பட்ட காலக்கெடுவிற்குள் செலுத்தப்படவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையை அபரதமாக கருதி வங்கி கணக்கில் சேர்க்கப்படுவதோடு, அதிகாரப்பூர்வ அலுவலர், சொத்துக்கான புதிய ஏலம் / விற்பனை நடத்த உரிமையுடையவராவார் & தவறிழைத்த ஏலதாரருக்கு அபராத தொகை மீதோ சொத்து மீதோ எந்த கோரிக்கையும் வைக்க கூடாது. விற்பனையானது ஜாமீன் பெற்று கடனளித்தவரின் உறுதிப்படுத்தலுக்கு கட்டுப்பட்டது. விற்பனையானது "'இருக்கின்ற இடத்தில் மற்றும் இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில், வில்லங்கம், சட்டபூர்வ கடன் பொறுப்புகள் தொடர்பாக, எந்த பிரதிநிதித்துவமோ அல்லது உத்திரவாதமோ வங்கியால் அளிக்கப்படாமல் நடைபெறும். மின்னனு ஏலம் ஏதேனும் தொழில்நுட்ப கோளாறு காரணமாக நடைபெறவில்லையெனில், அது மறுபட்டியலிடப்பட்டு, 7 நாட்களுக்கு முன்பே அறிவிப்பு வெளியிட்டு மீண்டும் நடத்தப்படும். இந்த அறிவிப்பு, ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு உள்ள எந்த இதர தீர்வுகள் மீதான தப்பெண்ணத்திலன்றி வழங்கப்படுகிறது.

ஷெட்யூல்: மின்னனு ஏலம் மூலம் விற்பனைக்கு உத்தேசிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டுள்ள சொத்தின் விபரங்கள் இதன் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

விரிவான அடமான சொத்துக்கள் விபரம்	அடிப்படை விலை	டேவணித் தொகை	மின்னணு ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் மற்றும் சொத்து அடையாள எண்	முன் வில்லங்கம்
குடியிருப்பு கட்டிடம் – நாமக்கல் பதிவு மாவட்டம், நல்லூர் சார் பதிவு மாவட்டம், (தற்போது பரமத்தி) நல்லூர் கிராமம், சர்வே எண். 216/1 (இது சர்வே எண். 216/1A என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது) ல் அமையப்பெற்ற, 4515 சதுர அடி (2236 சதுர அடி + 2279 சதுர அடி) பரப்பளவு கொண்ட ப்ளாட் எண். 3 & 4 என்ற இடம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். ப்ளாட் எண். 3 ன் எல்லைகளாவன பின்வருமாறு – சண்முகம் என்பவருக்கு சொந்தமாக ப்ளாட் எண். 2 என அடையாளங்காணப்படும் சொத்துக்கு – மேற்கு, 19 அடி அகல கிழமேல் பொது பாதைக்கு – தெற்கு, குப்பன் மற்றும் முத்துசாமிக்கு சொந்தமான சொத்துக்கு – வடக்கு, M. தங்கம்மாள் என்பவருக்கு சொந்தமாக ப்ளாட் எண். 5 என அடையாளங்காணப்படும் சொத்துக்கு – கிழக்கு., இந்த எல்லைகளுக்கு மத்தியில் உள்ள ப்ளாட் எண். 3., இதன் அளவீடுகளாவன – தென்வடல் இருபுறமும் 52 அடி., கிழமேல் இருபுறமும் 43 அடி., என மொத்தம் 2236 சதுர அடி இடம். ப்ளாட் எண். 4 ன் அளவீடுகளாவன – தென்வடல் கிழக்கு புறம் 52 அடி., மேற்கு புறம் 54 அடி., கிழமேல் இருபுறமும் அடி., என மொத்தம் 2279 சதுர அடி இடம். மொத்த பரப்பு 2236 + 2279= 4515 சதுர அடி இடம் மற்றும் அதனுடன் கூடிய அனைத்து இதர வசதிகள் மற்றும் பாதை மற்றும் வழி வசதி உரிமைகள்.	ரூ. 72.33 இலட்சம்	ரூ 7.23 இலட்சம்	31.10. 2026 காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை **IDIB6624021418**	இல்லை

ஏலதாரர்கள், ஆன்லைன் விலைகோரலில் பங்கேற்க, எமது மின்னணு ஏல சேவைதாரர் **PSB Alliance Pvt. Ltd** – ன் வலைதளம் **(https://baanknet.com)** யை பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப ரீதியான உதவிக்கு எண். **8291220220** யை அழைக்கவும் அல்லது மின்னஞ்சல் முகவரி : **support.baanknet@psballiance.com** மற்றும் சேவைதாரர்களின் உதவி மையத்தின் இதர உதவி எண்களை தொடர்பு கொள்ளவும். பதிவு நிலை மற்றும் டேவணித்தொகை நிலையை அறிந்து கொள்ள **support.baanknet@psballiance.com** யை தயவு கூர்ந்து தொடர்பு கொள்ளவும். சொத்து விபரங்களுக்கும், சொத்தின் புகைப்படத்துக்கும் வலைதளம் **https://baanknet.com** யை தயவு கூர்ந்து பார்வையிடவும்., மேலும் இந்த தளம் தொடர்பான விசாரணைக்கு **PSB Alliance Pvt Ltd** – யை தயவு கூர்ந்து உதவி எண். **8291220220** ல் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர்கள் சொத்தை வலைதளம் **https://baanknet.com** ல் தேடும் போது இதன் மேற்குறிப்பிட்டுள்ள சொத்து அடையாள எண்ணை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இடம் : நல்லூர்
தேதி : 09.10.2026 அதிகாரப்பூர்வ அலுவலர், இந்தியன் வங்கி

केनरा बैंक Canara Bank
A Government of India Undertaking
Syndicate

மண்டல அலுவலகம் – சேலம்
2வது தளம், சாரதா ஸ்கூல் காம்பவுண்ட்,
சேலம் அழகாபுரம், சேலம் - 636 016.
Ph. No.0427-2440411. Cell : 9445028337

லாக்கர் வாடகை கட்டண நிலுவை -
பாதுகாப்பு பெட்டகம் (லாக்கர்) உடைத்து திறப்பதற்கான பொது அறிவிப்பு

இந்த அறிவிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நபர்/நபர்கள் கனரா வங்கியின் கீழ்க்கண்ட கிளையில் (இ-சிண்டிகேட் வங்கியின் கிளை உட்பட) பாதுகாப்பு பெட்டகம் (லாக்கர்) வசதியைப் பெற்றுள்ளனர். இதன் மூலம் சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களுக்கும் பொதுவாக பொதுமக்களுக்கும் ஒரு பொது அறிவிப்பு வழங்கப்படுகிறது. லாக்கர் வாடகையின் நிலுவைத்தொகையை செலுத்துவதற்கான கோரிக்கையுடன், எங்கள் வங்கி பதிவுகளின்படி, லாக்கர் வாடகைதாரர்கள் / வாடிக்கையாளர்கள் / LOA / சட்டபூர்வ வாரிசுதாரர்களுக்கு, அந்தந்த கிளைகள் ஏற்கனவே தனிப்பட்ட முறையில் கடிதங்கள் / அறிவிப்புகளை பதிவு செய்யப்பட்ட தபாலில் மீள் ஒப்புதலுடன் (AD) அனுப்பியுள்ளன. இந்த அறிவிப்புகள் இருந்தபோதிலும், லாக்கர் வாடகைதாரர்கள் / LOA / சட்டபூர்வ வாரிசுகள் கிளையைத் தொடர்பு கொள்ளாமலும் மற்றும் லாக்கர் வாடகை நிலுவைத் தொகையை செலுத்தவும் தவறிவிட்டனர்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள லாக்கர் வாடிக்கையாளர்களும் அவர்களது சட்டப்பூர்வ வாரிசுகளும் இதையே சட்டப்பூர்வ இறுதி அறிவிப்பாக கருதி, தேவையான ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட கிளையை தொடர்புகொண்டு, இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 நாட்களுக்குள் லாக்கர் வாடகை பாக்கியை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு வாடகைதாரர்கள் தவறும் நிலையில் வேறு எந்தவித அறிவிப்போ அல்லது தகவலோ இல்லாமல் லாக்கர்கள் உடைத்து திறக்கப்படும் அதற்கான செலவும் மற்றும் இழப்பும் வாடகைதாரர் அல்லது அவர்களது சட்டபூர்வ பிரதிநிதிகள் / வாரிசுகளையே / LOA சாரும்.

வ. எண்.	கிளை பெயர் / தொடர்பு எண்.	பாதுகாப்பு பெட்டகம் வாடகைதாரர் பெயர் & முகவரி (திரு / திருமதி)	பெட்டக கணக்கு எண்.	லாக்கர் வாடகை பாக்கிகள் ரூ.
1	சேலம் கோட்டை மெயின் / 0427-2210422	**திரு.P.K.முருகேசன்,** த/பெ. K.M.பொன்னுசாமி, 160, தோப்புக்காடு மெயின் ரோடு, பேர்லேண்ட்ஸ், சேலம்-636016	1217101023010	12,962/-

தேதி : 14-10-2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : சேலம் கனரா வங்கி

யூகோ வங்கி
(இந்திய அரசு நிறுவனம்)
(தலைமை அலுவலகம்:எண்.10, BTM சாரணி, கொல்கட்டா-700001)

சேலம் செவ்வாபேட்டை கிளை,
CSI வளாகம், போர்ட் மெயின் ரோடு,
சேலம் - 636 001.
Ph: 0427 – 2215415, 2210175
மின்னஞ்சல் : salem@uco.bank.in

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு (SARFAESI ACT 2002-ன் கீழ்)

அசையா சொத்தை விற்பதற்கான பொது விற்பனை அறிவிப்பு - விதி - (8) 6

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI)-ல் விதி 8(6)-ன் கீழ் வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களை மின்னணு ஏல முறையில் விற்பனை செய்தல்)

பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது என்னவெனில், யூகோ வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரியானவர், வங்கியிடமுள்ள கடன் கணக்குகள் தொடர்பாக கீழே குறிப்பிட்டுள்ள, அடமானமாகவுள்ள அசையா சொத்துக்களை தமது அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்கள் பாக்கித்தொகையினை செலுத்த தவறியதால் இந்தச் சொத்துக்களை **'உள்ள இடத்தில் உள்ளவாறு' 'உள்ள நிலையில் உள்ளவாறு' மற்றும் 'உள்ளது உள்ளவாறு', 'வங்கியிடமிருந்து எவ்வித உதவியும் கோரமுடியாது'** எனும் அடிப்படையில் விற்பதென வங்கி முடிவெடுத்துள்ளது.

கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் பெயர் & முகவரி / பாக்கித்தொகை விவரம் / கோரிக்கை அறிவிப்பு தேதி & சுவாதீன அறிவிப்பு தேதி	அசையா சொத்தின் விபரம்
1. திரு. V B விஜயகுமார் (விண்ணப்பதாரர்), த/பெ. திரு. S V பாலசுப்ரமணியம், **2. திரு. V B மணிகண்டன் (இணை விண்ணப்பதாரர்)**, த/பெ. திரு.S V பாலசுப்ரமணியம், **3. திரு. V B செந்தில்குமார் (இணை விண்ணப்பதாரர்)**, த/பெ. திரு.S V பாலசுப்ரமணியம், **4. திருமதி B தனலட்சுமி (இணை விண்ணப்பதாரர்)**, க பெ.திரு. S V பாலசுப்ரமணியம், **5.திருமதி. ஸ்ரீபிரியா, (உத்தரவாததாரர்)**, க/பெ. திரு. V B செந்தில்குமார், **6. திருமதி. கஸ்தூரி (உத்தரவாததாரர்)**, க/பெ. திரு. V B மணிகண்டன், அனைவரின் முகவரி: 85, சன்யாசி குண்டு சாலை, கிச்சிபாளையம், சேலம்-636015, **பாக்கித் தொகை:** 13.10.2026 அன்றுள்ளபடி ரூ.4,87,900/- (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தேழாயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்) - 29.09.2026 வரை கணக்கிடப்பட்ட வட்டியுடன் கூடிய தொகை - மற்றும் ஒப்பந்த விகிதப்படியான கூடுதல் வட்டி மற்றும் இதர தொடர்புடைய செலவுகள், கட்டணங்கள் போன்றவை. குறிப்பு: 01-05-2026 தேதியன்று ரூ.5,91,521.71/- (ரூபாய் ஐந்து லட்சத்து தொண்ணூற்றோராயிரத்து ஐந்நூற்று இருபத்தொன்று மற்றும் எழுபத்தியொரு பைசா மட்டும்) தொகைக்காக, SARFAESI சட்டம், 2002-ன் பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இத்தொகையானது 29-04-2026 வரையிலான வட்டி, அதன் மீதான வருங்கால வட்டி மற்றும் அதன்பின்னர் ஏற்படும் இதர கூடுதல் கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது; அத்துடன் ஏதேனும் திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை இருப்பின் அது இதில் கழிக்கப்படும். **கோரிக்கை அறிவிப்பு தேதி:** 08.05.2026; **அடையாளப்பூர்வ சுவாதீன தேதி:** 22.09.2026	சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சேலம் எண் 1 கூட்டு சார்-பதிவாளர் அலுவலக எல்லை, சேலம் வட்டம், சேலம் மாநகராட்சி, சேலம் டவுன் கிராமம், பஜார் தெரு, வடக்கு சிரேணி பகுதி; மறு-அளவை மற்றும் தீர்வையின்படி வார்டு-L, பிளாக்-6, புதிய நகர அளவை எண் 54-ல் அமைந்துள்ளதும், பழைய நகர அளவை எண் 529 (G-பிரிவு, 8-வது வார்டு) கொண்டதும் ஆகிய இடத்தில், 515 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் அமைந்துள்ளது. அளவுகள்: கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் 6 அடி 9 அங்குலம் மற்றும் தெற்கு பக்கம் 9 அடி; தெற்கு-வடக்காக கிழக்கு பக்கம் 79 அடி மற்றும் மேற்கு பக்கம் (வடக்கு நோக்கி) 49 அடி 6 அங்குலம் (இதிலிருந்து குறுக்காக 30 அடி). இச்சொத்து பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: பாலமுனியப்ப செட்டியார் மற்றும் சன்ஸ்களுக்கு சொந்தமான சொத்திற்கு கிழக்கில், சித்தைய செட்டியாருக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு மேற்கு மற்றும் தெற்கில், பஜார் தெருவிற்கு வடக்கில். இச்சொத்தில் R C C மற்றும் A C C கூரையுடன் கூடிய கட்டிடம் அமைந்துள்ளது (கதவு எண் 161; சொத்து வரி மதிப்பீட்டு எண் 3114548). **26.03.1997 தேதியிட்ட O.S. எண் 935/1996-ன் இறுதித் தீர்ப்பின்படி, இச்சொத்து திருமதி பி. தனலட்சுமி, திரு. வி. பி. விஜயகுமார், திரு. வி. பி. மணிகண்டன் மற்றும் திரு. வி. பி. செந்தில்குமார் ஆகியோரின் பெயரில் உள்ளது.**

குறைந்தபட்ச விலை: ரூ.69.60 இலட்சம் டேவணித் தொகை: ரூ.6.96 இலட்சம் ஏல உயர்வு தொகை ரூ.25,000/-

மின்னணு ஏல தேதி மற்றும் நேரம்: 17.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை

(தேவைப்பட்டால், வரம்பற்ற கால நீட்டிப்புகளுடன் தலா 10 நிமிட நேரத்திற்கு நடைபெறும்)

விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் **02.11.2026** அன்று காலை **11.00** மணி முதல் மாலை **04.00** வரை முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடலாம். விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை **(1) https://baanknet.com (2) https://www.ucobank.com (under Notice Section)** ஆகிய இணையதளங்களில் பார்க்கலாம். மேலும் விபரங்களுக்கு: **திருமதி.S . அபிராமி, மொபைல்: 9147403302; திரு.ராஜாராம், மொபைல்: 9994860035** ஆகியோர்களை தொடர்பு கொள்ளலாம்.

இடம்: சேலம்; தேதி : 14.10.2026 அதிகாரபூர்வ அலுவலர், யூகோ வங்கி